## ‘இந்தி’த் திணிப்பு, தொகுதி மறுசீரமைப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளில்

# வியூகங்களை வகுப்பதில் மகத்தான சக்தியாகத் திகழ்கிறார் முதல்வர்!

## சைதையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாவில் கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் புகழாரம்!

சென்னை, மார்ச். 19 -

**“இந்தி”த் திணிப்பு, தொகுதி மறு சீரமைப்பு பிரச்சினைகளில் வியூகங்களை வகுப்பதில் மகத்தான சக்தியாகத் திகழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்று கழகப் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் சைதாப்பேட்டையில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா சென்னைத் தெற்கில் வேளச்சேரி சாலை, சைதாப்பேட்டையில்தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார் ஏற்பாட்டில் ‘கோடி மக்களின் நாடித்துடிப்பு நம் முதல்வர்’ எனும் தலைப்பில் வாழ்த்தரங்கம், நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வாழ்த்தரங்க நிகழ்ச்சி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நீர்வளத்துறை அமைச்சர் - கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவதில் பெருமைக்கொள்கிறேன். மாவட்ட கழக செயலாளர் சொன்னதைப்போல் இந்தத் தெரு தி.மு.கழகத் தெரு என்றுபெயர். காரணம் எல்லோருக்கும் அத்துபடி. தலைவர் பிறந்தநாள்விழாவில் சாப்பிட்டுவிட்டு போகலாம் என்றார். நான் உடனிருந்தேன். அப்போது கேட்டார் ஜெகத்தை இருக்க சொன்னேனே சாப்பிடுவதற்கு என்று என்னிடம் கேட்டார். நான் சொன்னேன் நேரம் 1 மணியாகிவிட்டது. ஒரு துயரச் சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. அதற்குச் சென்றுவிட்டார் என்றேன். என்ன என்று? தலைவர் கேட்டார்.

### சைதை பகுதியோடு நெருக்கம் கொண்ட தலைவர்!

அதற்கு நான், சைதை சம்பத் மறைந்துவிட்டார் என்று சொன்னேன். ஏன் முதலிலேயே சொல்லவில்லை என்று கேட்டார். நீங்களே இப்போதுதான் பிறந்தநாள்விழாவில் தொண்டர்களைச் சந்தித்துவிட்டு வருகிறீர்கள் என்றேன். கையில் எடுத்து சாப்பிடப் போன சாப்பாட்டை அப்படியே தட்டிலேயே போட்டுவிட்டார். ஒரு நீண்ட கால கழகத் தொண்டன், என்று சம்பத்தைப் பற்றி பேசிக்கொண்டே இருந்தார். சரியாகக்கூட சாப்பிடவில்லை. அந்த அளவிற்கு சைதாப்பேட்டையோடு நெருக்கம் கொண்டவர் தலைவர்.

என்னைப் பொறுத்தவரையிலே 1961ஆம் ஆண்டு முதன்முதலாகப் பச்சையப்பன் கல்லூரியில் படித்தபொழுது மேடை ஏறினேன். நுங்கம்பாக்கத்தில் லட்சியபுரம் என்றொரு இடமிருக்கிறது. அந்த காலத்தில் துணை மேயராக இருந்தவரோடு சேர்ந்து பேசியிருக்கிறேன். அதற்குப் பிறகு என்னைப் பேச்சாளராக வளர்த்தது இந்த சைதாப்பேட்டைத் தொகுதிதான். இந்தத் தொகுதியில் நான் பேசாத இடமில்லை. இந்தத் தொகுதியில் மிகக் கெட்டிக்காரர்களாக இருந்தவர்களெல்லாம் மிக அற்புதமானத் தோழர்கள்.

இங்கே இருக்கின்ற துணை மேயர் மகேஷினுடைய அப்பா கே.பி.முனுசாமி. அவரை எனக்கு நன்றாகத் தெரியும். கட்சியிலேயே முக்கியமானவர். இவருடைய மாமனார் பவளவண்ணன். இந்தப் பகுதியிலே கட்சியை வளர்த்தவர்கள். இவர்களெல்லாம் கலைஞரிடத்திலே பக்திக்கொண்டவர்கள். இங்கே இருந்த சைதை சம்பந்தம் பேசினாரென்றால் விடிய விடிய கேட்டுக்கொண்டே இருக்கலாம். நறுக்குத்தெரித்தாற்போல் பேசுவார். புலவர் நடேசன், புருஷோத்தம்மன் என்று நிறைய பேர். அத்தனைப்பேரும் ஒருநாள் தவறாமல், வீதி, வீதியாய் பேசி, பேசி கட்சியை வளர்த்தவர்கள்.

### இந்தத் தொகுதியில் இருப்பவர்கள் புகழ் பெற்று விடுவார்கள்!

மணி அவர்கள் கட்சிக்கு வந்திருக்கிறார். அவருடைய மகன் இப்போது சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவர் அந்த காலத்திலேயே மிகுந்த பொறுப்போடு இருந்த கட்சி இது. அப்போது கூட்டங்களை நடத்திக்கொண்டிருப்பவர். ஆகவே இந்தத் தொகுதி தி.மு.க.வினுடைய கேந்திரமாக இருந்தது. காஞ்சி மணிமொழியார் அவர்கள்தான் இங்கே தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். பிறகு கலைஞர் அவர்கள் அந்த இடத்தைப் பிடித்தார்கள். கலைஞருக்குப் பிறகு புருஷோத்தமன் கொஞ்சநாள் ஆண்டுப்பார்த்தார். இந்த தொகுதியில் இருப்பவர்களெல்லாம் பேரும், புகழும் பெற்றுவிடுபவர்களே வந்து கொண்டிருக்கிறார்கள்.




ஸ்ரீதர் என்கிற ஒரு மனிதன். அவர் சாதாரணமான ஒரு தொண்டன். ஆனால் உழைப்பால் உயர்ந்து, மாநகராட்சியிலிருந்து, சட்டப்பேரவையாகி, முரசொலி மாறனுக்கு மிக மிக வேண்டியவர். இங்கு இருக்கின்ற கோட்டூர்புரம் அவரால் உருவாக்கப்பட்டது. ஆக அத்தகைய சிறந்த நண்பர்கள் எல்லாம் உண்டு, இந்த தொகுதியில். எனவே இந்த சைதாப்பேட்டைத் தொகுதி என்னுடைய வரலாற்றில் ஒரு அத்தியாயத்தை எழுதக்கூடிய அளவிற்கு நெருக்கமாக இருக்கின்றத் தொகுதி. எனவே இந்தத் தொகுதியில் நான் பேசுவதிலே மற்றற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைக்கு எப்படியும் இந்தக் கூட்டத்தில் ஜெகத்ரட்சகன் கவிதைப் படிப்பார் என்று எனக்குத் தெரியும். ஆகையால் அவரைவிட்டுவிட்டு நாம் நழுவலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவர் அதற்கு முன்னாடியே அணையைப்போட்டு நான் பேசுவேன் என்று முடித்துக்கொண்டார். ஆனால் எங்கள் இரண்டு பேரையும்விட மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கெட்டிக்காரர். ஒரு எழுபதாண்டு காலம் நான் பேசாத கூட்டம் இல்லை. எனக்கு அறிமுகம் இல்லாத ஆட்களில்லை.

எந்த ஊருக்குப்போனாலும், செங்கோட்டைக்குப் போனாலும் அல்லது நாகர்கோயிலில் இருக்கிற எந்தவொரு கிராமத்திற்கு போனாலும், எல்லோரையும் படி படி என்று சொல்வேன். நீங்கள் ஒருவர்தான் எல்லோரையும் இணைத்துக் கூப்பிடுகிறீர்கள் என்பார்கள் அங்குள்ளவர்கள். கோவிந்தசாமி காலத்திலிருந்தே எனக்கு மா.சு.வைத் தெரியும். ஒரு மாவட்டக் கழகத்திற்கு, ஒரு மாவட்டக் கழகச் செயலாளர் எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு ஒரு இலக்கணம்தான், நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள்.

### பலம் வாய்ந்த கட்சியாக வளர்த்தார் கலைஞர்!

என் கட்சிக்கு 10 வக்கீல் வரமாட்டானா? படிச்சவன் வரமாட்டானா? என கட்சியை வைத்து இயங்கிக்கொண்டிருக்கிறேன். ஆட்சியை விட ஒரு படித்தவன் என் கட்சிக்குவருவதை ஏற்பேன் என்று அண்ணா சொன்னார். எனக்கு ஆட்சி வேண்டாம் என்று அண்ணா சொன்னார். அரங்கநாதன் என்பவருக்குக் கொடுத்தார். இப்போ வக்கீலாக இருக்கிறாரே இளங்கோ அவருடைய அப்பா. ஆகையினால் இந்தக் கட்சியை இப்படி வளர்த்தார்கள். பிறகு அண்ணா மறைந்த பிறகு இந்தக் கட்சி உருப்படாது என்றார்கள். ஆனால் அண்ணா தலைவராக இருந்தபோது, கட்சி இருந்ததைவிட பலம்வாய்ந்தக் கட்சியாக ஆக்கிக்காட்டினார் கலைஞர்.

அப்போதுதான் வந்தது பிரச்சினை. கலைஞருக்கு முன் கழகத்தின் மூத்தவராக இருந்தவர் நாவலர் நெடுஞ்செழியன். அவருக்கும், கலைஞருக்கும் போட்டி உருவாகிவிட்டது. அப்போது எம்.எல்.ஏக்கள் என்ன சொன்னார்களென்றால், “நாவலரை நாங்கள் மதிக்கிறோம். கட்சிக் கட்டுப்பாட்டிற்கு கலைஞர்தான் இருக்க வேண்டும்.” என்று சொன்னார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். “கடமை, கண்ணியம் இந்த இரண்டையும்விட கட்டுப்பாடுதான். கட்சிக்கு முக்கியம். கலைஞர் மு.கருணாநிதி கட்சிக்கு பரவாயில்லை” என்று சொன்னார். கலைஞர் காலத்தில் ஆட்சிக்கு வந்த பிரச்சினை. ஏராளம். வேறு யாருக்காவது இந்தப் பிரச்சினைகள், இப்படி வந்திருந்தால், சன்னியாசியாகிப் போயிருப்பார்கள். அத்தனையும் சமாளித்தார் கலைஞர் அவர்கள். கலைஞர் மறைந்துவிட்டார். உச்சக்கட்டத்தில் கட்சியைக் கொண்டு வந்தார். எனக்கு மிகுந்த பயம். ஓர் எழுபது ஆண்டுகாலம் எனக்கு கட்சியில் அனுபவமுண்டு. எல்லோருடனும் இருந்தவன். கலைஞர் வளர்த்தக் கட்சி. வளர்ச்சிப்பெற்றுள்ளது. கட்சியின் தலைவர் பொறுப்பை ஸ்டாலின் ஏற்கப் போகிறார். எப்படி செயல்படுவாரோ? என்று எனக்கு உள்ளூர பயம் இருந்தது.

ஆனால் முதலமைச்சர் ஸ்டாலினை எனக்கு சின்ன வயதிலிருந்தே தெரியும். அவருடைய வேகமும் எனக்குத் தெரியும். ஆனால் கட்சியைப் பற்றி எனக்கு பயம். எதை செய்வாரென்று? அதற்குப் பிறகு செயல்தலைவராகி, பின்பு தலைவராகி. இந்த இயக்கத்தை நடத்துகிற விதத்தை, ஒரு வாத்தியார் மாதிரி உட்கார்ந்து கவனிக்கிறார். கட்சிக்காரர் ஒரு பிரச்சினையை சொன்னால், அதை அற்புதமாக கையாள்கிறார். கையாண்டுக் கட்சியைக் கட்டிக் காக்கிறார். கட்சியைக் கட்டிகாத்தவுடன் எனக்கு கவலையில்லை. அடுத்து ஆட்சிக்கு வந்தார். ஆட்சி நடத்துவதுதான்மிகவும் கடினமானது. ரொம்ப கடினமான இடம். யார் ஆட்சிக்கு நல்லது செய்பவர்கள். கெட்டது செய்பவர்கள் என கணிக்க முடியாது. எங்கு காலை வைக்கிறோம் என்று தெரியாது. எங்கு குழிப்பறித்திருப்பார்கள் என்று தெரியாது.

### 70 ஆண்டுகளில் நான் பேசாத ஊரில்லை!

ஆனால் தம்பி கவனம், கவனம் என்று எச்சரித்துக்கொண்டிருப்பேன். ஆனால் நான் எதிர்பார்த்ததைவிட இயக்கத்தையும், கட்சியையும் ஒருசேர நடத்துகிற ஆற்றல், கலைஞரின் ஆற்றலைவிட ஒரு மடங்கு மேலோங்கி நிற்கிறார் என்பதை, என் 70 ஆண்டுகால வரலாற்றில் நான் கண்டது. எனக்கெல்லாம் தலைவர் ஸ்டாலினை புகழ்ந்து என்ன ஆகப்போகிறது. ஆகவே எனக்கு போதும். எனக்கொன்றும் கவலையில்லை. என் கட்சி நிலைத்து நிற்கணும். அதுதான் எனக்கு வேண்டியது. அதுதான் நான் வளர்ந்தக் கட்சி. 70 ஆண்டுகள் நான் போகாத ஊரில்லை. பேசாத ஊரில்லை. போகாத ஜெயில் இல்லை. படாத பாடில்லை. அவ்வளவையும் தாங்கிக் கொண்டோம்.

### நான் மிசாவில் இருந்த போது கலைஞர் உருக்கமிகு கடிதம்!

நான் மிசாவில் ஜெயிலில் இருக்கிறேன். 30 நாட்கள் யாரும் பார்க்கக் கூடாது என்று சொன்னார்கள். 31வது நாள் என் மனைவி என் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தார். நான் ஓடிப்போய் என் குழந்தையை தூக்கி முத்தமிட்டேன். அங்கிருந்த காவலர் என்னைப் பிடித்து படார் என்று கீழேத்தள்ளிவிட்டார். ஏன் என்று கேட்டேன். நீ கிரிமினல் என்று சொன்னார். உன் குழந்தையைக் கொன்றுவிடுவேன் என்று சொன்னார். அப்போது சொன்னேன் என் மனைவியிடம், “இனிமேல் நான் விடுதலையாகி வரும்வரை, இங்கு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வராதே” என்று சொன்னேன். நான் இதை சொன்னேன் என்று. கலைஞர் தெரிந்துகொண்டு, ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதிக்கு போன் செய்து கலைஞர் வெளியூர் போகும்போது காட்பாடி ஸ்டேசனில் எனது மகனைக் கொண்டுவரச்சொல்லி, மடியில் உட்கார வைத்து கொஞ்சநேரம் வைத்திருந்துவிட்டு, செல்வார். அப்போது கலைஞர் எனக்குஒரு கடிதம் எழுதினார். அதில்,

**“வாலிபத்தில், வசந்தத்தில் இளைப்பாற வேண்டிய நீ,**

**பெருங்கொடுமை சாக்காட்டில் வாழுகிறாய் நீ எனக்கேட்டு,**

**உனக்காக என் உள்ளம் அழுதடா!”**

என்று எழுதி அனுப்பினார். ஆனால் பொது வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம்தான். தளபதி ஆட்சியை நடத்துகிறார். இந்த நிர்வாகத்தில் அவர் சொன்னதைப்போல மிக நுட்பமான ராஜதந்திரத்தைக் கையாள்கிறார். தலைவர் கலைஞருக்குதான் அந்த தைரியம் உண்டு. பளீர் என்று முடிவெடுத்துவிடுவார்.

ஒரு நாள் இந்திராகாந்தி அறைக்குக் கலைஞர் செல்கிறார். வாங்க, வாங்க, உங்களைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் என்று சொன்னார் அவர். எதற்கு என்று கலைஞர் கேட்டார். ஜனாதிபதியாக யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு கலைஞர் அதைத்தான் ஆண்டுதோறும் பிராமணர்களைத் தேர்ந்தெடுக்கிறீர்களே? என்றார். ஏன் ஒரு பிற்படுத்தப்பட்டவரை தேர்ந்தெடுக்கக் கூடாதா? என்றார் கலைஞர்.

### ராஜதந்திர முறைகளை கையாள்வதில் கெட்டிக்காரர் கலைஞர்!

அதற்கு அந்தம்மையார் அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. யாரையோ மனதில் வைத்திருந்திருக்கிறார். அப்படி யார் இருக்கிறார் பிற்படுத்தப்பட்டவர் என்றார். ஏன் உங்கக் கட்சியில் ஜெயில்சிங் இருக்கிறாரே என்றார் கலைஞர். அவர் என்ன பிற்படுத்தப்பட்டவரா? என்று கேட்டார். ஆம். பொற்கொல்லர் என்று கலைஞர் சொன்னார். கலைஞரால் அவர் அப்பொறுப்பிற்கு வருகிறார்.

அதற்குப் பிறகு ஒருநாள் பொதுக்கூட்டம் முடித்துவிட்டு, கலைஞர் வந்தார். அப்போது கேட்டோம். கலைஞர் அதற்கு “ஒரு பெண் குடியரசுத் தலைவராக வரக்கூடாதா?” என்று கேட்டார். அதற்காக கைக்கொடுத்தார் சோனியா காந்தி. அதற்குபிறகுதான் பிரதிபா பாட்டீல் இந்தியாவின் குடியரசுத் தலைவராக வந்தார். அதுமட்டுமல்ல. ராஜதந்திர முறைகளை கையாள்வதில் கலைஞர் அவர்கள் கெட்டிக்காரர். அது பலமுறை டெல்லிக்கு போனபிறகுதான், பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களுக்கு டெல்லி கையில் வந்தது. உண்மையைச் சொல்கிறேன்.

ஆனால் தளபதிக்கு இந்த நான்கு ஆண்டுகளுக்குள்ளேயே இந்த டெல்லி கைக்கு வந்திருக்கிறது. அதிகமாக அவர் டெல்லிக்குப் போகவில்லை. மூன்று தடவை போயிருக்கிறார். முதல் தடவை நான், அவர், டி.ஆர்.பாலு ஆகியோர் போனோம். 2வது தடவை அவர் போய் பேசி வந்தார். ஆனால் உட்கார்ந்த, இடத்திலிருந்து அனைத்து மாநிலங்களையும் ஒன்றிணைத்துள்ளார். அனைத்து மாநிலங்களும் நாம் சொல்வதை சொல்ல வேண்டும்.

ஒன்றிய ஆட்சியில் குவிந்துகிடக்கிற அதிகாரம் வர வேண்டும். ஒன்றிய அரசிலிருந்து மாநிலங்களுக்கு நிதி வரவேண்டும். யார் வேண்டாம் என்று சொல்வார்கள். அனைவரும் We followed Stalin, என்கிறார்கள். இன்னொன்றையும் கையில் எடுத்தார் ஸ்டாலின். இந்தி. நாங்கள் இந்தியை எதிர்த்தபோது, ஆந்திராவில்கூட ஆதரித்தார்கள். பல பேர் ஆதரித்தார்கள். இப்போது மராட்டியத்தில் எதிர்க்கிறார்கள். ஏன் பம்பாயில் இந்திதான் இருந்தது. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், இந்தி வந்ததினால் எங்கள் மராட்டியமே அழிந்துபோய்விட்டது என்கிறார்கள்.

பீகாரில் அவன் மொழி அழிந்து போய்விட்டது என்கிறார்கள். எனவே இப்போதுதான் தெரிகிறது. இந்த அணிக்கும் தலைவர் தளபதிதான் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே அகில இந்தியாவிலே உட்கார்ந்த இடத்திலிருந்தே இரண்டு வியூகங்களை வகுத்து, அதற்கு தலைமைப் பெறுப்பேற்ற மகத்தான காரியத்தை, தளபதி செய்திருக்கிறார். அது இளந்தலைவருடைய மகத்தான சக்தி. இன்னும் அவருக்கு காலம் இருக்கிறது. இன்னும் அவருக்கு நேரமிருக்கிறது. அதைத்தான் நான் அவரை பார்க்கிறபோதெல்லாம் சொல்வேன்.

இந்த நிதானம் போதும். அதே நேரத்தில் வேகமும் வேண்டும். அற்புதமாகப் பேசுகிறார். அற்புதமாக எழுதுகிறார். அற்புதமாக ஆட்சி செய்கிறார். ஆகையினால் ஆட்சி முறையைப் பொறுத்தவரையில் நாமெல்லாம் எதிர்பார்த்ததைவிட, ஏன் எதிரிகள் எதிர்பார்த்ததைவிட, ஏன் பிரதமரே எதிர்பார்த்ததைவிட ஆட்சிசெய்கிறார். How? Because he is son of Karunanidhi என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறார். அதை நாம் பாராட்ட வேண்டும்.

இதுமட்டுமல்ல. மக்களுக்கு சலசலப்பில்லாமல் ஆட்சியை நடத்த வேண்டும். அந்த சலசலப்பில்லாமல் ஆட்சியை நடத்துகிறாரா? இல்லையா? யார் என்ன கேட்கிறார்களோ அதற்கு முன்பே செய்துவிடுகிறாரே. எங்கள் கிராமத்திற்கு நீங்கள் வந்து பார்க்க வேண்டும். நான் மூன்று நாட்கள் அங்கிருந்துவிட்டுதான் இங்கே வந்திருக்கிறேன். எங்களுக்கு வீட்டிற்கு 3 ஆயிரம் வருகிறது என்கிறார்கள். எனக்கு, என் மகள் படிக்கிறார்கள். மகன் படிக்கிறான். ஆக மூன்று பேருக்கும் சேர்த்து மூன்றாயிரம் ரூபாய் என்கிறார்கள்.

இப்போது பிரச்சினையே கிடையாது. எல்லாம் சரியாக போய்க்கொண்டிருக்கிறது. அனைத்தையும் பார்க்கக்கூடியவர் தளபதி அவர்கள். இலவசமாகக் கொடுக்கும் எல்லாவற்றையும் ஆய்வு செய்கிறார். எப்படி நீங்கள் உங்கள் தந்தையைப் போலவே செயல்படுகிறீர்களே? என்று பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு தளபதி அவர்கள் வளர்ந்திருக்கிறார்.

### ‘இந்து’ தலையங்கத்தில் முதல்வரைத்தான் எழுதுகிறார்கள்!

இன்னும் ஒரு 25 ஆண்டுகள் தமிழ்நாட்டைப்பற்றிகவலையில்லை. நான் இருப்பேனோ இல்லையோ. ஆனால் கட்சி இருக்கும். என் ராஜ்ஜியம் இருக்கும். என் தலைவன் இருப்பார். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். கலைஞர் இருக்கிறபொழுது, ஜாம்பவான்கள் ஒன்றிய அரசாங்கத்தில் இருந்தார்கள். இப்போது இருப்பவர்கள். ஜாம்பவான்கள் அல்ல. ஆகையினால் அவருக்கு கையாள்வது சுலபம். இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை ‘தி இந்து’ - ஆங்கில செய்தித்தாள் தலையங்கத்தில் தலைவரைப் பற்றித்தான் எழுதுகிறார்கள். “மாநிலங்களுக்கு கொடுக்கிற நிதியை கொடுக்காமல் இருப்பது தவறு” என்ற வாதத்தைக் கிளறிவிட்டார் ஸ்டாலின். அது நேஷ்னல் விவாதமாக மாறிவிட்டது. எனவே இதற்குத் தலைமைத் தாங்குகிறவர் மு.க.ஸ்டாலின் ஆகிவிட்டார்.

### திருவிழாவில் வரும் வாணவேடிக்கை போன்ற கட்சிகள்!

தினந்தோறும் வருகிறது பாருங்கள், சிறு, சிறு கட்சிகளெல்லாம், இதெல்லாம் திருவிழாவில் வருகிற வாணவேடிக்கைப் போன்றது. உடனே முடிந்துப்போய்விடும். இது கட்சி. அவர்களது கூட்டம். கட்சிக்காக உயிரைக் கொடுப்பார்கள். அங்கு அதைக்கூட கொடுக்கமாட்டார்கள். ஆகையினால் அவர்களைப் பற்றி நான் பேசுவது கிடையாது. பேசவேண்டிய அவசியம் கிடையாது. தேர்தல் வர, வர, எல்லாக் கட்சிகளும் கரைந்து போகும். நாம் எதிர்க்கிறக் கட்சி அ.தி.மு.க.வாகத்தான் இருக்கும். அவர்களாலேயும் முடியவில்லை என்றால், ஏழு, எட்டு கூட்டுப்போட்டுக் கொண்டு வருவார்கள். எப்படி வந்தாலும், மீண்டும் தளபதிதான். தி.மு.க.தான் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.